## கோரிக்கை எண் 4

# தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

### 1. முன்னுரை:

வணிகவரித் துறை, மிக அதிக அளவு வருவாய் ஈட்டித்தரும் மாநில அரசுத் துறையாகும். வணிகவரி ஆணையர் வணிகவரித் துறையின் தலைவராவார். அவருக்கு உதவியாக தலைமை அலுவலகத்தில் வணிகவரி இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் உள்ளனர். களப்பணிகளில் இவருக்கு உதவ துணை ஆணையர்கள் (ஆட்சிப்பகுதி), இணை மற்றும் துணை ஆணையர்கள் (செயலாக்கம்) உள்ளனர்.

வணிகவரித் துறை பின்வரும் வரி விதிப்புச் சட்டங்களை நிருவகித்து வருகிறது:

(1) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டம்.

(2) தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனைவரிச் சட்டம்.

(3) தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனைவரிச் (மேல்வரி) சட்டம்.

(4) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனைவரிச் சட்டம்.

(5) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைவரிச் சட்டம்.

(6) தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம்.

(7) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்.

(8) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஒட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்.

109/3-1

(9) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பரவரிச் சட்டம்.

(10) தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம்.

மாநில அரசுக்கு கிடைக்கின்ற வருவாயில் பெரும்பகுதி, அதாவது மொத்த வருவாயில் சுமார் 70 சதவீதம் வணிகவரிகள் வாயிலாகக் கிடைக்கிறது. 1994-95 ஆம் ஆண்டில் ரூபாய் 4164.84 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 1993-94 ஆம் ஆண்டில் 3,399.29 கோடி ரூபாயும், 1992-93 ஆம் ஆண்டில் 3,016.89 கோடி ரூபாயும் வசூலிக்கப்பட்டுள்ளது.

**2. வணிகவரித் துறையின் வருவாயும், செலவும் வருமாறு:—**

| *ஆண்டு* (1) | *வருவாய்* (2) | *செலவு* (3) | *வருவாயில் செலவு விகிதம்* (4) |
|---|---|---|---|
| | | *(ரூபாய் கோடியில்)* | |
| 1990-91 | 2,167.16 | 28.30 | 1.32 |
| 1991-92 | 2,575.70 | 31.86 | 1.28 |
| 1992-93 | 3,016.89 | 35.75 | 1.19 |
| 1993-94 | 3,399.29 | 40.85 | 1.20 |
| 1994-95 | 4164.84 | 40.31 (31-1-1995 வரை) | – |

**3. வணிகவரித் துறை நான்கு பிரிவுகளாகச் செயல்படுகிறது.**

அவையாவன:-

(i) வரி மதிப்பீட்டுப் பிரிவு

(ii) மேல் முறையீட்டுப் பிரிவு

(iii) செயலாக்கப் பிரிவு

(iv) தணிக்கைப் பிரிவு

**(i) வரி மதிப்பீட்டுப் பிரிவு:**

இம்மாநிலம் ஒன்பது வணிகவரி கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வணிகவரி கோட்டமும் ஒரு வணிகவரி துணை ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இக்கோட்டம் வணிகவரி மாவட்டங்கள்



அல்லது வணிகவரி சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தற்போது 39 வணிகவரி மாவட்டங்கள்/சரகங்கள் உள்ளன. ஒவ்வொரு வணிகவரி மாவட்டமும்/சரகமும் ஒரு வணிகவரி உதவி ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. கோயம்புத்தூர் வணிகவரி கோட்டத்தில் பொள்ளாச்சி வணிகவரி மாவட்டத்தைப் பிரித்து திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வணிகவரி மாவட்டம் 1995-96-ல் ஏற்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

வணிகவரி மாவட்டம்/சரகம் பல வரிவிதிப்பு வட்டங்களைக் கொண்டது. இம்மாநிலத்தில் 316 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றுள் மத்திய வரி விதிப்பு வட்டங்கள் என அழைக்கப்படும் 6 வரி விதிப்பு வட்டங்கள் (சென்னையில் 4 மற்றும் கோயம்புத்தூரில் 2) வணிகவரி உதவி ஆணையர்கள் தலைமையில் இயங்குகின்றன; 218 வட்டங்கள் வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும், மீதமுள்ள 92 வட்டங்கள் துணை வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும் இயங்குகின்றன. 1994-95 ஆம் ஆண்டில் சென்னை (தெற்கு) வணிகவரி சரகத்திலுள்ள கொரட்டூர் மற்றும் திருச்சி வணிகவரி சரகத்திலுள்ள கரூர் (மேற்கு) ஆகிய இரு புதிய வரிவிதிப்பு வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் வணிகவரி கோட்டத்திலுள்ள துடியலூர் வரிவிதிப்பு வட்டத்தைப் பிரித்து ஒரு புதிய வரிவிதிப்பு வட்டத்தை ஏற்படுத்தவும், (1) சென்னையில் உள்ள ஐஸ் அவுஸ் மற்றும் பிற கோட்டங்களில் உள்ள (2) அரியலூர் (3) காங்கேயம் (4) கிருஷ்ணகிரி (5) ராசிபுரம் மற்றும் (6) குழித்துறை ஆகிய துணை வணிகவரி அலுவலர்கள் வரிவிதிப்பு வட்டங்களை 1995-96 ஆம் ஆண்டில் வணிகவரி அலுவலர்கள் வரிவிதிப்பு வட்டங்களாக மேல்நிலைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை வடக்கு வணிகவரி மாவட்டத்தில் பழைய வரி நிலுவைகள் வசூலிப்பதற்காக 1995-96 ஆம் ஆண்டில் ஒரு வரி வசூல் குழு அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(ii) மேல் முறையீட்டுப் பிரிவு**

மேல் முறையீட்டுப் பிரிவைப் பொறுத்தவையில், விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவரின் ஒட்டு மொத்த கண்காணிப்பின்கீழ் 20 மேல் முறையீட்டு உதவி ஆணையர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் பணி முன்னேற்றத்தை மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவர் ஆய்வு செய்கிறார். நிர்வாகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் மேல் முறையீடுகளை தீர்வு செய்வது தொடர்பான பணி முன்னேற்றம் குறித்து அரசும் ஆய்வு செய்து வருகிறது.

தற்போதைய அமைப்பில் மேல் முறையீட்டுப் பிரிவு வணிகவரித் துறையின் கண்காணிப்பிற்கு அப்பாற்பட்டுள்ளது. இதே நிலையை

மேல்முறையீட்டு துணை ஆணையருக்கும் பொருந்துமாறு ஆணையிடலாம் எனக் கருதப்பட்டது. அதன் அடிப்படையில் இரண்டு மேல் முறையீட்டு துணை ஆணையர்கள் பதவியினை அரசு ஏற்படுத்தியுள்ளது. இவர்கள் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள மத்திய வரி விதிப்பு வட்ட உதவி ஆணையர்களின் வரி விதிப்பு ஆணைகளின் மீதான மேல் முறையீடுகளை விசாரித்து முடிவு செய்வார்கள்.

மேல்முறையீட்டுப் பிரிவினை பலப்படுத்த சென்னையில் முதல் மற்றும் இரண்டாவது கூடுதல் மேல்முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் அவர்கள் முன்னுள்ள துறை பிரதிநிதிகள் ஆகியவர்களுக்கு முறையே கூடுதலாக இரண்டு உதவியாளர்கள் மற்றும் இரண்டு இளநிலை உதவியாளர்கள் பதவிகளை 1995-96-ஆம் ஆண்டில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் அமைத்தல்:**

தேங்கியுள்ள வரி விதிப்பு வழக்குகளில் விரைவாக தீர்ப்பு வழங்கவும் அதனால் அரசுக்கு சேரவேண்டிய ஏராளமான வரித் தொகைகளை வசூல் செய்யவும் "வரி விதிப்பு சிறப்பு நடுவர் மன்றம்" ஒன்று ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. "தமிழ்நாடு 1992 ஆம் ஆண்டு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றச் சட்டம்" என்ற சட்டத்தை அரசு இதற்காக இயற்றியுள்ளது. இதுவரையில் உயர்நீதிமன்றம் விசாரித்து வந்த வழக்குகளை இனிமேல் இந்த சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும். தொடக்கத்தில் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டம், தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனைவரிச் சட்டம், தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனைவரி (மேல்வரி) சட்டம் ஆகிய சட்டங்களில் கீழ்வரும் வணிகவரி வழக்குகளை மட்டும் இந்த சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும். "தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் (நடைமுறை) விதிகள்" மற்றும் "தமிழ்நாடு வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றம் (தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர் ஆகியோரின் ஊதியம், படிகள் மற்றும் பணி நிபந்தனைகள்) விதிகள்" ஆகியவை அரசால் இயற்றப்பட்டுள்ளன.

**(iii) செயலாக்கப்பிரிவு:**

இந்த மாநிலத்தில் நான்கு செயலாக்கக் கோட்டங்கள் உள்ளன. சென்னையிலுள்ள செயலாக்கக் கோட்டம் வணிக வரிகள் இணை ஆணையர் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றது. மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள செயலாக்கக் கோட்டங்கள் துணை ஆணையர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. சோதனைச் சாவடிகளும் இணை/துணை ஆணையர்கள் (செயலாக்கம்)



கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. சோதனைச் சாவடிகள் வழியாகச் செல்லாத வாகனங்களை இடைமறித்து சோதனை செய்ய செயலாக்கப்பிரிவில் சுழற்படைகள் உள்ளன.

தற்போது, மாநிலத்தில் 58 வணிகவரி சோதனைச் சாவடிகள் இயங்கிவருகின்றன. அவற்றுள் 31 சோதனைச் சாவடிகள் மாநில எல்லையோரத்தில் உள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து சட்டவிரோதமாக திட்டமிட்டு வரி ஏய்ப்பு செய்யும் நோக்கத்துடன் ரப்பர் கடத்திச் செல்லப்படுகிறது. மாற்றுப் பாதையில் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட சோதனைச் சாவடிகள் நல்ல பலனைக் கொடுத்துள்ளன. 1995-96 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவடத்தில் (1) கூட்டப்புளி சந்திப்பு (2) குமாரபுரம் (3) சங்கனாபுரம் சந்திப்பு (4) பழுவூர் கிராமம் மற்றும் (5) குமாரபுரம் விலக்கு ஆகிய இடங்களில் 5 நிரந்தர சோதனைச் சாவடிகள் அமைக்கவும், ஒரு சுழற்படை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் 1995-96 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள செயலாக்கப்பரிவு மற்றும் சோதனைச்சாவடிகளை மேற்பார்வையிட நாகர்கோயிலில் வணிகவரி அலுவலர் (செயலாக்கம்) அலுவலகம் ஏற்படுத்தவும் தேனி மற்றும் சிவகாசியில் வாகனங்களின் இயக்கத்தைத் தணிக்கை செய்ய சுழற்படைகள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் செயலாக்கப் பிரிவு அலுவலர்களுக்கு 21 இளநிலை உதவியாளர்-தட்டச்சர் பதவிகள் ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சரக்குகளை இரயில்கள் மூலமாக அனுப்பும்போது, பெரும்பாலான வணிகர்கள் பொய்யான பெயர்களிலோ அல்லது தங்களின் பெயரிலேயோ பதிவு செய்வது கண்டறியப்பட்டுள்ளது. இதனால் பெருமளவில் வரி ஏய்ப்பு செய்யப்படுகிறது. எனவே, இரயில்கள் மூலமாக அனுப்பப்படும் சரக்குகள் எடுத்துச் செல்வதைக் கண்காணிப்பதற்காக வணிகவரி அதிகாரிகள், சரக்குகளை பதிவு செய்யும் இரயில் அலுவலகங்களிலும், சரக்கு முற்றங்களிலும் 24 மணி நேரமும் இருக்கவேண்டியுள்ளது. இவ்வலுவலர்கள், வணிகர்கள் கொண்டுவரும் வணிகவரி தொடர்பான படிவங்களையும் இரயில்வே சரக்குகளை பதிவு செய்யும் பதிவேடுகளையும் சரிபார்க்கும் பொருட்டு அங்கு இருக்கின்றனர். தெரிந்தெடுக்கப்பட்ட ஒன்பது இரயில்வே சரக்கு பதிவு அலுவலகங்களில் 24 மணி நேரமும் பணியாற்றிட 27 துணை வணிகவரி அலுவலர்களை பயன்படுத்த தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சோதனைச் சாவடிகளில், போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்த்து வாகனங்களை விரைவாகத் தணிக்கை செய்ய வேண்டும் என்பதைக்

கருத்தில் கொண்டு ஒரு நாளைக்கு ஆயிரம் வண்டிகளுக்குமேல் கடந்துசெல்லும் சோதனைச் சாவடிகள் படிப்படியாக இருவழிச் சோதனைச் சாவடிகளாக அமைக்கப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 58 சோதனைச் சாவடிகளில் 23, பெரிய சோதனைச் சாவடிகள் ஆகும். அவற்றுள் பூவிருந்தவல்லி, ஒசூர், கந்தேகவுண்டன் சாவடி, இராணிப்பேட்டை, இரும்புலியூர், புழல், தோப்பூர் மற்றும் கனியூர் ஆகியவை இருவழிச் சோதனைச் சாவடிகளாகும்.

சோதனைச் சாவடிகள் அருகில் ஏற்படும் சங்கடங்களைக் குறைக்கும் பொருட்டு 28-3-1994 அன்று உயர்மட்ட விவாதம் நடத்தப்பட்டது. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் ஆகிய மூன்று அமைச்சர்கள், உள் துறை, போக்குவரத்துத் துறை, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, பொதுப்பணித் துறை அரசுச்செயலர்கள், வணிகவரி ஆணையர், தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மற்றும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் ஆகியோர்களுடன் விவாதித்தனர். தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள சோதனைச் சாவடிகளில் அருகில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் கண்டறிந்து அதை சீர் செய்யும் பொருட்டு துணை சாலை மற்றும் வாகனங்கள் நிற்கும் இடம் ஆகியவைகளை அமைப்பது குறித்து அக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இக்காரணத்திற்காக, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அல்லது அவரால் நியமிக்கப்பட்டவர் தலைவராகவும் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர், இணை/துணை ஆணையர் (செயலாக்கம்), மண்டல போக்குவரத்து அலுவலர், கோட்டப்பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மற்றும் கோட்டப் பொறியாளர் (மாநில நெடுஞ்சாலை) ஆகியவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உள் துறை அரசுச் செயலாளர் இந்த ஆலோசனைக்குழுவில் மைய அமைப்பாளராக செயல்படுவார். பூவிருந்தவல்லி, இரும்புலியூர், புழல், ஒசூர், களியக்காவிளை, தோப்பூர், கந்தேகவுண்டன் சாவடி மற்றும் திருமங்கலம் ஆகிய 8 சோதனைச்சாவடிகள் அளவீடு செய்வதற்காக கண்டறியப்பட்டுள்ளன.

### (iv) தணிக்கைப் பிரிவு:

துறைத் தணிக்கைப் பிரிவு, வரிவிதிப்பு மற்றும் வரிவசூல் ஆகியவற்றில் காணப்படும் குறைகளைக் கண்டுபிடிக்கிறது. இதன் மூலம் மாநிலக் கணக்காய்வுத் தலைவரின் தணிக்கைக்கு முன்னதாகவே அவற்றைச் சரிப்படுத்த முடிகிறது. மாநிலத்தில் தற்போது 41 துறைத் தணிக்கைக் குழுக்கள் உள்ளன. இவை சம்பந்தப்பட்ட துணை ஆணையர்கள் வகுக்கும் செயல்திட்டங்களின் அடிப்படையில் செயல்படுகின்றன. துறைத் தலைமை



அலுவலகத்தில் துறைத் தணிக்கைப் பணி மற்றும் மாநில கணக்காய்வுத் தலைவரின் தணிக்கை அறிக்கை மற்றும் அவற்றின் மீதான குறைகளை களையும் பணி ஆகியவை வணிகவரி ஆணையரின் கீழ் ஒரு இணை ஆணையரைக் கொண்ட தனிக்குழுவினால் கவனிக்கப்படுகின்றன. ஒவ்வொரு காலாண்டிலும் அதற்கு முந்தைய காலாண்டில் செய்யப்பட்ட வரிவிதிப்பு மற்றும் வசூல் பணிகள் துறைத் தணிக்கைக் குழுவால் தணிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. துறைத் தணிக்கைக் குழுவின் அறிக்கை மீதான குறை நிவர்த்தி நடவடிக்கையை குறைகள் முற்றிலுமாக நிவர்த்தி செய்யப்படும் வரையில் மாவட்ட உதவி ஆணையர்களால் கண்காணிக்கப்படுகின்றன. துறைத் தணிக்கை குழு மற்றும் மாநில கணக்காய்வுத் தலைவரால் எழுப்பப்படும் முக்கிய தணிக்கைக் குறிப்புகள் ஆகியவை வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள தணிக்கைப் பிரிவால் கண்காணிக்கப்படுகின்றன. துறைத் தணிக்கைப் பிரிவின் செயல்பாட்டினை மேம்படுத்த அவர்களின் பணி தகுந்த கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் நீதி மன்றங்களின் சமீபகால தீர்ப்புகள், அவை குறித்த விளக்கங்கள் ஆகியவை சுற்றறிக்கைகளாகவும், செய்தித்தொகுப்புகளாகவும் வணிகவரி ஆணையரால் தணிக்கைக் குழுக்களுக்கு அனுப்பப்படுகின்றன.

## 4. கட்டிடங்கள்-வணிகவரி அலுவலகங்களுக்கு அரசுக் கட்டிடங்கள் கட்டுதல்:

வணிகவரித் துறை அலுவலகங்கள் அனைத்தும் படிப்படியாக அரசுக் கட்டிடங்களில் இயங்கவேண்டும் என்பதே அரசின் கொள்கையாகும். தற்போது அனைத்து துணை ஆணையர் அலுவலகங்களும் (சென்னை மேல்முறையீட்டு துணை ஆணையர் அலுவலகம் நீங்கலாக) அரசின் சொந்தக் கட்டிடங்களில் இயங்குகின்றன. இது போன்றே 6 உதவி ஆணையர் அலுவலகங்கள் தவிர ஏனைய உதவி ஆணையர்களின் அலுவலகங்கள் அரசு கட்டிடங்களில் இயங்கிக்கொண்டிருக்கின்றன. 13 மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 7 மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்கள் சென்னையில் தனியார் கட்டிடங்களில் இயங்கிவருகின்றன. மற்ற 361 அலுவலகங்களில் 128 அரசுக் கட்டிடங்களிலும் 233 தனியார் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களுக்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தி படிப்படியாக அரசு கட்டிடங்கள் கட்டப்படும்.

58 சோதனைச் சாவடிகளில் 15 சோதனைச் சாவடிகள் நிரந்தரமான அரசுக் கட்டிடங்களிலும் மற்ற சோதனைச் சாவடிகள் தனியார்

கட்டிடங்களிலோ அல்லது கீற்றுக் கொட்டகையிலோ செயல்பட்டு வருகின்றன.

வாணியம்பாடியிலும், ஆரணியிலும் உள்ள வணிகவரி அலுவலகங்களுக்கு தலா ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிடங்கள் கட்டவும், பன்னாரியில் உள்ள சோதனைச் சாவடிக்கு ரூ. 3.70 இலட்சம் மதிப்பீட்டில் நிரந்தரக் கட்டிடம் கட்டவும் 1993-ல் அனுமதி அளிக்கப்பட்டது. அக்கட்டிடங்கள் கட்டும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

### 5. வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்:

வணிகவரித்துறை அலுவலர்களின் நிர்வாகத் திறமையை மேம்படுத்தி அவர்களின் செயல்திறனை உயர்த்துவதற்காக, வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டது. 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பயிற்சி நிலையத்தில் வணிகவரித்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் பிரிவிற்கு வணிகவரி துணை ஆணையர் ஒருவர் தலைவராகவுள்ளார். இவருக்கு வணிகவரி உதவி ஆணையர் இருவரும், வணிகவரி அலுவலர் ஒருவரும் உதவி புரிகின்றனர். இப்பயிற்சி நிலையம், உதவி வணிகவரி அலுவலர், துணை வணிகவரி அலுவலர், வணிகவரி அலுவலர் ஆகியோருக்கு "நினைவுகூர் பயிற்சி" வகுப்புக்களை நடத்துகிறது.

இந்நிலையம் வணிகவரித் துறையின் நிர்வாகம் சம்பந்தமான குறிப்பிட்ட தலைப்புகள் குறித்து துறைகளிலுள்ள வல்லுநர்கள் வாயிலாக சிறப்பு விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்கிறது. 1994-95 ஆம் ஆண்டில் 20 வணிகவரி அலுவலர்களும், 84 துணை வணிகவரி அலுவலர்களும், 83 உதவி வணிகவரி அலுவலர்களும் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

கணிப்பொறி மயமாக்குவதற்காக, பயனுள்ள தகவல் விவரங்களைச் சரியான படிவத்தில் அலுவலர்கள் அனுப்புகின்றனரா என்பதை உறுதி செய்ய அவர்களுக்கு கணிப்பொறி பற்றிய தெளிவும் அனுபவமும் தேவை. எனவே உதவி ஆணையர் பதவியிலும் அதற்குக் கீழ் பதவியிலும் உள்ள அலுவலர்களுக்கு சென்ற ஆண்டு முதல் கணிப்பொறி அடிப்படைப் பயிற்சி வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்திலேயே அளிக்கப்பட்டு வருகிறது. இதுவரை 60 உதவி ஆணையர்களுக்கும் 248 வணிகவரி அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 6. கணிப்பொறி மையம் :

வணிகவரித் துறையின் கொள்கைகளைத் திறம்பட வடிவமைக்கவும் நிர்வாகத் திறமையை மேம்படுத்தவும் தேவையான விவரங்களைச் சேகரித்து,



தொகுத்து, முறைப்படுத்தி, தகவல்கள் பெற்றுக்கொள்ள கணிப்பொறி மையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. 1994-95 ல் கணிப்பொறியைப் பயன்படுத்தி பின்வரும் தகவல்கள் எடுக்கப்பட்டுள்ளன.

1993-94 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் 1959-ன் கீழ் பொருள்வாரியான விற்றுமுதல் தொகை மற்றும் வருவாய் ஆகிய தகவல்கள் வணிகர்கள் தரும் மாதாந்திர அ1 அறிக்கையின் அடிப்படையில் தொகுப்பது முடிக்கப்பட்டு வெளிப்பெறும் தகவல்கள் பெறப்பட்டன. அதன்பிறகு அதேபோல் செப்டம்பர் 1994 உடன் முடிவடைந்த அரையாண்டிற்கும் வெளிப்பெறும் தகவல்கள் பெறப்பட்டன. இத்தகவல்கள் வரிவிதிப்பு நடவடிக்கையில் மிகவும் பயன்படுகின்றன.

மேலும், டிசம்பர் 1993, மார்ச்சு 1994, ஜூன் 1994 மற்றும் செப்டம்பர் 1994 உடன் முடிந்த காலாண்டுகளுக்கு வணிகவரி சோதனைச் சாவடிகளிலிருந்து பெறப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட பொருள்களின் விபரங்கள் தொகுக்கப்பட்டன. இத்தகவல்கள் வரி ஏய்ப்பைத் தடுக்க செயலாக்கப் பிரிவினால் பயன்படுத்தப்படுகின்றன. இன்றையவரையிலான வணிகர்கள் விவரங்கள் அடங்கிய பட்டியல் தொடர்ந்து தயாரிக்கப்பட்டு வருகிறது.

1987 ஆம் ஆண்டு வணிகவரித் துறையில் நிறுவப்பட்ட கணிப்பொறி முறை பழைமையாகிவிட்டதால், அரசு ஆணை எண். 261, வணிகவரி மற்றும் அறநிலையத்துறை, நாள் 12-8-1994-ல் சென்னையில் உள்ள கணிப்பொறியின் திறனை உயர்த்திச் செம்மைப்படுத்தவும், திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் வணிகவரி துணை ஆணையர்கள் அலுவலகங்களில் உப மையங்கள் நிறுவவும், ரூ. 75.01 இலட்சத்திற்கு ஒப்புதலளித்துள்ளது. சென்னையில் கணிப்பொறியின் திறனை செம்மைப்படுத்தி அமைக்கும் பணி முடிவடைந்துவிட்டது. உப மையங்கள் நிறுவும் பணி மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1995-96-ல் உத்தேச மதிப்பு ரூ. 23.99 இலட்சம் செலவில் மேற்கொண்டு வளர்ச்சிக்காகவும், உபகரணங்களை சீர் செய்யவும் கணிப்பொறி திறன் விரிவாக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7. வணிகர் நல வாரியம்:

வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்திற்காக வணிகர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராகவுள்ளார். இதன் இணைத் தலைவராக மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சரும் துணைத் தலைவராக திரு. கே. லியாகத் அலிகான் அவர்களும் உள்ளனர். இவ்வாரியத்தில் அலுவலர்களும், அலுவலர் அல்லாதோரும் உறுப்பினர்களாக உள்ளனர். 1994-95 ஆம் ஆண்டில் மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில்



109/3-2

15-4-1994 மற்றும் 10-11-1994 ஆகிய இரண்டு நாட்களில் வாரியக்கூட்டம் நடைபெற்றது. 1994-95-ல் (31-12-94 வரை) இவ்வாரியம் 2,663 ஆயுள் உறுப்பினர்களையும், 1,943 சாதாரண உறுப்பினர்களையும் சேர்த்துள்ளது. இவ்வாரியம் தற்போது வணிகர்களுக்கு அளிக்கும் உதவிகள் பின்வருமாறு:

**I. வருமானவரி செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லாத அனைத்து உறுப்பினர்களும் வாரியத்தின் கீழ்க்கண்ட உதவிகள் பெறலாம்.**

(அ) இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவை சிகிச்சை ஆகியவைகளுக்கு மருத்துவச்சான்றின் பேரில் ரூ. 20,000/-

(ஆ) வாரியத்தின் உறுப்பினராக உள்ள பொருளீட்டும் நபர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு குடும்ப நலநிதி ரூ. 20,000/-

(இ) நலிவுற்ற உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வியினைத் தொடர்ந்து முடிக்க உதவி

1. பாலிடெக்னிக், கலைக்கல்லூரி அதற்குச் சமமான கல்வி (படிப்பு முடியும் வரை) ரூ. 2000/- (ஒரு ஆண்டிற்கு)
2. முதுநிலை படிப்பு, தொழிற்கல்வி, அல்லது அதற்குச் சமமான கல்வி (படிப்பு முடியும் வரை) ரூ. 2000 (ஒரு ஆண்டிற்கு)

(ஈ) உடல் ஊனமுற்ற வாரிய உறுப்பினர் அல்லது அவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்படும்.

**II. தவிர, வருமான வரிச் செலுத்தும் வாரிய உறுப்பினர்கள் உட்பட அனைத்து உறுப்பினர்களுக்கும் கீழ்க்கண்ட திட்டங்கள் பொருந்தும்.**

1. 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்புகளில் முதல் மதிப்பெண்கள் பெறும் மாணவ/மாணவிகளுக்கு கீழ்க்கண்டதொகை பரிசாக வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதல் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள் | ரூ. 5,000 |
| இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள் | ரூ. 3,000 |
| மூன்றாம் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவிகள் | ரூ. 2,000 |

2. விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிபெறும் உறுப்பினர்களின் மகன்/மகளுக்கு கீழ்க்கண்ட தொகை பரிசாக வழங்கப்படும்.

| | |
|---|---|
| சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு | ரூ. 25,000 |
| அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு | ரூ. 10,000 |
| மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு | ரூ. 5,000 |



**8. குறை தீர்க்கும் பிரிவு:**

வணிகர்கள், தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்குரிய ஓர் அமைப்பாகத் திகழ, 1984 ஆம் ஆண்டில் குறைதீர்க்கும் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு இணை ஆணையரைத் (நிருவாகம்) தலைவராகவும் மற்றும் இணை ஆணையர் (மக்கள் தொடர்பு) உதவி ஆணையர் (வணிகவரி-2) ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டுள்ளது.

**9. விற்பனை வரி ஆலோசனைக்குழு :**

விற்பனை வரி நிருவாகம் குறித்த வணிகர்களின் கருத்தை அறிய உதவும் வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் அரசு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் வணிகவரி ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு, அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே தலைவர்களாவர். இக்குழுக்களில் அலுவலர்கள் மற்றும் வாணிபக்கழகங்கள், வர்த்தகச் சங்கங்கள், கூட்டுறவுகள், வேளாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலர் அல்லாத பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். வணிகவரிச் சட்டங்களினால் வர்த்தகத்துறையில் எழும் பல்வேறு வணிகப்பிரச்சினைகள், விற்பனை வரிச்சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை நிருவகிப்பது தொடர்பான பிரச்சினைகளை இக்குழு பரிசீலிக்கிறது. நிருவாகத்தை மேம்படுத்தவும், வணிகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கவும், இக்குழுக்களின் தீர்மானங்களும் அவை தெரிவிக்கின்ற ஆலோசனைகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

**10. மேல்வரி மற்றும் கேளிக்கை வரி வசூலிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமளித்தல்:**

உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, சென்னை மாநகராட்சி பகுதியில் வசூலிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல் வரியின் மொத்த வசூலில் 50 சதவீதத்தொகை சென்னை மாநகராட்சிக்கு மானியமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. அதுபோன்றே மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிப்பகுதிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகள் பிற நகராட்சிகள், நகர பஞ்சாயத்துகள் ஆகியவைகளில் வசூலிக்கப்படும் விற்பனை வரியின் மீதான மேல் வரியின்

மொத்த வசூலில் 20 சதவீதம் அந்தந்த உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மக்கட்தொகை அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் மானியமாக வழங்கப்படுகிறது.

அவ்வாறே கேளிக்கை வரி வசூல் மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளுக்கு 70 சதவீதமும், தேர்வு நிலை நகராட்சிகள் முதல் நிலை நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துகளுக்கு 65 சதவீதமும் பிற உள்ளாட்சி மன்றங்களுக்கு 60 சதவீதமும் ஒப்படைக்கப்படுகின்றன.

## 11. காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகை உட்பட தொழிலகங்களுக்கான விற்பனை வரிச் சலுகைகள் :

மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக மிகப் பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழிலகங்கள் செலுத்த வேண்டிய வரிவசூலைக் கைவிட அரசு அனுமதிக்கிறது. அத்துடன் புதிய தொழில்கள், தொழிலக விரிவாக்கங்கள், நலிந்துபோன தொழிலகங்கள் மற்றும் நூற்பு ஆலைகள் ஆகியவை செலுத்தவேண்டிய வரிகளை, காலம் தள்ளி வட்டியின்றி செலுத்தும் சலுகையினையும் அரசு வழங்கிவருகிறது. 1994-95 ஆம் ஆண்டில் 28-2-1995 வரை இவ்வகையில் ரூபாய் 14309.64 இலட்சம் வரியினைக் காலம் தள்ளிச் செலுத்தும் சலுகை, தொழிலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 12. வருவாய் வசூலில் காணப்படும் போக்கு:

**வணிகவரித் துறையின் பல்வேறு சட்டங்களின்கீழ் வசூலிக்கப்பட்ட தொகை குறித்த விவரம் வருமாறு:**

**(அ) தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டம்:**

1990-91 முதல் 1994-95 வரையிலான கால அளவில் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு :

| *நிதி ஆண்டு* | *மொத்த வரவு* (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1990-91 | 1,779.03 |
| 1991-92 | 2,130.27 |
| 1992-93 | 2,507.28 |
| 1993-94 | 2,819.23 |
| 1994-95 | 3,452.92 |



**(ஆ) 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டம்:**

1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் 1990-91 முதல் 1994-95 வரையிலான காலஅளவில் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:-

| *நிதி ஆண்டு* | *மொத்த வரவு* (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1990-91 | 276.07 |
| 1991-92 | 329.84 |
| 1992-93 | 363.12 |
| 1993-94 | 394.91 |
| 1994-95 | 477.19 |

**(இ) தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச்சட்டம்:**

1990-91 முதல் 1994-95 வரையிலான கால அளவில் மேற்குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:-

| *நிதி ஆண்டு* | *மொத்த வரவு* (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1990-91 | 69.62 |
| 1991-92 | 68.56 |
| 1992-93 | 76.81 |
| 1993-94 | 82.19 |
| 1994-95 | 87.89 |

**(ஈ) தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப்பந்தய வரிச்சட்டம் :**

1990-91 முதல் 1994-95 வரையிலான காலஅளவில் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:-

| *நிதி ஆண்டு* | *மொத்த வரவு* (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1990-91 | 5.66 |
| 1991-92 | 4.67 |
| 1992-93 | 5.12 |
| 1993-94 | 5.68 |
| 1994-95 | 5.70 |

**(உ) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் விடுதிகள் ஆகியவற்றில் அளிக்கப்படும் ஆடம்பர வசதிகள் மீதான வரிவிதிப்பு சட்டம்:**

1990-91 முதல் 1994-95 வரையிலான காலஅளவில் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:-

| *நிதி ஆண்டு* | *மொத்த வரவு* (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1990-91 | 17.04 |
| 1991-92 | 17.46 |
| 1992-93 | 22.43 |
| 1993-94 | 27.75 |
| 1994-95 | 35.86 |



**(ஊ) தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பரவரிச் சட்டம்:**

1990-91 முதல் 1994-95 வரையிலான காலஅளவில் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:-

| *நிதி ஆண்டு* | *மொத்த வரவு* (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1990-91 | 7.00 |
| 1991-92 | 6.00 |
| 1992-93 | 6.00 |
| 1993-94 | 2.00 |
| 1994-95 | 1.00 |

**(எ) தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச்சட்டம்:**

1990-91 முதல் 1994-95 வரையிலான காலஅளவில் இச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட வருவாய் பற்றிய விவரம் வருமாறு:-

| *நிதி ஆண்டு* | *மொத்த வரவு* (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1990-91 | 19.67 |
| 1991-92 | 24.84 |
| 1992-93 | 42.07 |
| 1993-94 | 69.51 |
| 1994-95 | 105.27 |

**வ. சத்தியமூர்த்தி,**
*வணிகவரித் துறை அமைச்சர்.*